(19)

# MEMORANDUM OF UNDERSTANDING

**Executed between**

## Tamil University Thanjavur

**Department of Palm Leaf Manuscripts**

**&**

## Kongunadu Arts and Science College, Coimbatore

**Department of Tamil**

புரிந்துணர்வு ஒப்பந்தம்

தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறை

மற்றும்

கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை

# Memorandum of Understanding
## Executed between

## Tamil University Thanjavur
## Department of Palm Leaf Manuscripts
## &
## Kongunadu Arts and Science College
## Department of Tamil

## புரிந்துணர்வு ஒப்பந்தம்
## தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறை
## மற்றும்
## கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம் 1981 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாள் தோற்றுவிக்கப்பட்டது. இருபத்தைந்து துறைகளுடன் இப் பல்கலைக்கழகம் அறிவுலகமும் ஆராய்ச்சியுலகமும் பாராட்டிப் போற்றும் பல்வேறு பணிகளைத் திறம்பட ஆற்றி வருகின்றது. இப் பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்பட்ட 1981–ஆம் ஆண்டிலிருந்து ஓலைச்சுவடித் துறை மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றது. உலகெங்கிலும் உள்ள தமிழ் ஓலைச்சுவடிகளைத் தேடித் தொகுத்துப் பாதுகாத்தலும் பதிப்பித்து வெளியிடுதலும் இத்துறையின் தலையாய நோக்கங்களாகும். ஓலைச்சுவடிகளை நுண்சுருள், குறுந்தகடு, நகல் ஆகிய அறிவியல் கருவிகளைக் கொண்டு இத்துறை பதிவுசெய்து பாதுகாத்து வருகின்றது.

கோயம்புத்தூரில் 1973–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டுக் கிராமப்புற மாணாக்கர்களுக்காகக் கல்விப் பணியாற்றி வரும் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியானது, தேசிய மதிப்பீடு மீள்தர நிர்ணயக்குழுவின் 'A' தகுதியுடன் (CGPA 3.64 out of 4, 3rd Cycle) பாரதியார் பல்கலைக்கழக அளவில் முதலிடத்தைப் பெற்றுள்ளதுடன், தனிச்சிறப்புத்திறன் கல்லூரித் தகுதியும் (College of Excellence) பெற்று மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றது. தேசிய நிறுவனத் தரக்கட்டமைப்பின் (NIRF) தரப்பதிவில் இந்திய அளவில் ஆராய்ச்சித்துறையில் மூன்றாவது இடத்தையும் ஒட்டுமொத்த அளவில் பத்தொன்பதாவது இடத்தையும் பெற்றுள்ளது. இத்தகைய சிறப்பு மிக்க கல்லூரியின் தமிழ்த்துறை 2012–ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் மலேசியா, இலங்கை ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பன்னாட்டுக் கருத்தரங்குகளை நடத்தியதன் மூலமாக 30 ஆய்வுக்கோவை நூல்களை வெளியிட்டுள்ளது. மேலும், பல்கலைக்கழக

நிதிநல்கைக் குழு, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம் உள்ளிட்ட அமைப்புகளிலிருந்து நிதியுதவி பெற்று தேசிய அளவிலான கருத்தரங்குகளையும் பயிலரங்குகளையும் நடத்தி வருகின்றது.

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகமும், கோவை கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறையும் கீழ்க்கண்ட கல்விசார் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை செய்து கொள்கின்றனர்.

- கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறையில் இளங்கலை, முதுகலை நிலையில் கல்லூரிக்குழு ஒப்புதலுடனும், பாரதியார் பல்கலைக்கழகத்தின் ஒப்புதலுடனும் புதிய பாடத்திட்டங்களை உருவாக்குதல், நடப்பிலிருக்கும் பாடத்திட்டங்களைச் செழுமைப்படுத்துதல், புதிய பாடப் பிரிவுகளை (சான்றிதழ், பெருஞ்சான்றிதல்) உருவாக்குதல்.
- இருதுறை ஆசிரியர்களும் இணைந்து செயல்படுவதன் மூலம் ஆசிரியர்களின் பணி, கல்வி, ஆய்வு முதலிய கூறுகளின் புரிதல்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் அதன்மூலம் தங்கள் திறன்களை மேம்படுத்திக் கொள்ளுதல்.
- சுவடிகளைப் படித்தல், பாதுகாத்தல், பதிப்பித்தல் முதலான பணிகளில் இரு நிறுவன ஆசிரியர்களும் இணைந்து செயல்படுதல், கல்லூரித் தமிழாய்வுத்துறை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குத் தமிழ் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பயிற்சி அளித்தல், சுவடிப்பதிப்பு நூல்களைத் திரட்டித் தொகுப்பதுடன், அதனை மீளாய்வு செய்து மறுபதிப்பையும் செம்பதிப்பையும் உருவாக்குதல்.
- சுவடிகளைப் படிப்பதற்காக ஆய்வு மாணவர்களுக்கு நகல் மட்டும் கொடுப்பது. ஓலைச்சுவடிப் பயிற்சி பெற்ற ஆய்வு மாணவர்களுக்குச் சுவடிகளைக் கொடுத்து ஒப்பாய்வுக்குப் பயன்படுத்த அனுமதிப்பது. இரு நிறுவனங்களும் இணைந்து வெளியிடும் சுவடிப்பதிப்புகள் இரு நிறுவனங்களின் வெளியீடுகளாகவே கொண்டு வர வேண்டும். சுவடிப்பதிப்பு நூல்களின் உரிமை தமிழ்ப் பல்கலைக்கழகம் சார்ந்ததாகவே அமைதல் வேண்டும்.
- கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குப் பயிற்சிக்காகவும், ஆய்விற்காகவும் வருகின்றபொழுது தங்குமிட வசதியை இலவசமாக ஏற்பாடு செய்து தருவது. சுவடி திரட்டல், நூல் வெளியிடல், களஆய்வு மேற்கொள்ளல், நிகழ்வுகள்

நடத்துதல் முதலான சூழல்களில் இரு நிறுவனங்களின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு அவ்வப்போது முடிவெடுத்துக் கொள்வது.

- சுவடிதிரட்டல், பட்டியலிடல், பாதுகாத்தல், வெளியிடுதல் ஆகியவற்றை முதன்மை நோக்கமாக மேற்கொள்வது. இவ்வொப்பந்தத்திற்குப் பிறகு திரட்டப்படும் ஓலைச்சுவடிகளைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திடம் ஒப்படைத்தல்.
- மேற்காணும் ஒப்பந்தம் மூலம் இணைந்து உருவாக்கப்படும் ஆய்வுக் கட்டுரைகள், தொகுப்பு நூல்கள், குறுவட்டுகள் முதலான வெளியீடுகளை இரு நிறுவனங்களும் இணைந்து வெளியிடுதல்.
- அறிவுசார் கட்டமைப்பு நிலைகளை மேம்படுத்திக் கொள்ளுவதற்கும் அகத்தூண்டல் களுக்கும் மட்டுமே இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பெறுகின்றது. வேறு ஏதேனும் புதிய நடைமுறைகளைச் செயல்படுத்த வேண்டுமெனில் இரு நிறுவனங்களும் முன்கூட்டியே திட்டமிட்டு, கலந்தாலோசனை செய்து பின்பு எழுதி நடத்திக்கொள்ளலாம். இரு நிறுவனங்களும் இணைந்து நிகழ்த்தும் தத்தம் செயல்பாடுகளைத் தனித்தனியே ஆவணப்படுத்திக் கொள்ளலாம்.
- ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிகழ்த்தப்பெறும் செயல்பாடுகள் இரு நிறுவனங்களின் தலைவர்களும் அவரவர்கள் சார்பில் நியமிக்கப்பெறும் ஆய்வுத்திறனும், பட்டறிவுடன் கூடிய ஒருங்கிணைப்பாளர்களையும் சார்ந்தவையாகும். ஒப்பந்தத்தினைக் கொண்டு இரு நிறுவனங்களும் வேறெந்த அலுவல் நிலையிலான வேண்டுகோள்களையும் கேட்கக் கூடாது.
- தேவைப்படின் இரு நிறுவனங்களின் அவ்வப்போதைய நிதிநிலையைப் பொறுத்து, நிதிசார் தேவைகளை முறையாகப் பேசிப் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டும்.
- ஒப்பந்தக் காலத்தில் இரு நிறுவனங்களும் இக்குறிப்பிட்ட பொருண்மையில் வெவ்வேறு தளங்களில் தனித்தனியே ஈடுபட்டுக் கொள்ளவும் செயல்படவும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகை செய்து தருகின்றது.
- இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் அறிவு மேம்பாட்டிற்கு மட்டும் ஏற்படுத்திக் கொள்ளப் பெறுகின்றது. வணிக நோக்கில் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. இரு நிறுவனங்களின் பெயர்களை இருவரும் பயன்படுத்துவதற்கு முன்பாக விரிவாகக் கலந்தாய்வு செய்து, தொடர்பு கொண்டு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.
- ஒப்பந்தக் காலத்தில் இரு நிறுவனங்களால் நடத்தத் திட்டமிடப்பெறும் நிகழ்வுகள், கருத்தரங்குகள், கருத்தரங்க முன்மொழிவுகள், அழைப்பிதழ்கள் முதலான அனைத்து

ஏற்பாடுகளும் விரிவான, வெளிப்படையான, முறையான கலந்தாய்வுகளின் மூலமாகச் செய்து கொள்ள வேண்டியவை.

- இரு நிறுவனங்களும் முன்னரே தீர்மானித்த செயல்பாடுகளைச் செய்தி நிறுவனங்களுக்கு அறிக்கையாக வெளியிடும்பொழுது, இருவரும் எழுத்து வடிவில் இசைவு பெற்று வெளியிட வேண்டும்.
- ஒவ்வொரு நிறுவனமும் அடுத்த நிறுவனத்திடமிருந்து பெற்ற தகவல்களை மந்தண அறிக்கைகளாகக் கருதிப் பாதுகாக்க வேண்டும். எழுத்து வடிவிலான ஆவண வடிவிலான முன்வரைவை இரு நிறுவனங்களும் நன்கு பரிசீலித்து இருதரப்பு இசைவிற்குப் பின் பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டியது.
- இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் 5 ஆண்டு காலத்திற்கு நடைமுறையில் இருக்கும். அதன்பின்பு இருதரப்பினரும் விரும்பினால் இதனை நீட்டிப்புச் செய்து கொள்ளலாம்.

| | |
|---|---|
| முனைவர் வே.பாலசுப்பிரமணியம்<br>முதல்வர்<br>கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி<br>கோயம்புத்தூர்–641 029. | முனைவர் ச.முத்துக்குமார்<br>பதிவாளர்<br>தமிழ்ப் பல்கலைக்கழகம்<br>தஞ்சாவூர்–613 010 |

முன்னிலை : (கையொப்பம்)

1. டாக்டர் சி.ஏ.வாசுகி
   செயலாளர் மற்றும் இயக்குநர்
   கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
   கோயம்புத்தூர்–641 029. :

   8/11/2017

2. முனைவர் மோ.கோ.கோவைமணி
   இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்
   ஓலைச்சுவடித்துறை
   தமிழ்ப் பல்கலைக்கழகம்
   தஞ்சாவூர்–613 010. :

3. முனைவர் க.முருகேசன்
   தமிழ்த்துறைத்தலைவர்
   கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
   கோயம்புத்தூர்–641 029. :